
# தமிழ்ச் சிட்டு

குரல் 25
இசை 1

சுறவம் 2033
[ சனவரி - 2002 ]



சிறுவர் கலை இலக்கியத் திங்களிதழ்

விலை: உரு.3.00

# நல்லவர் இடத்தில் நீயும் ஓர் இடம்பெறு!

தம்பி, நீ ஒரு தமிழ்மகன்! உன்னை
நம்பி இந்த நாடும் மக்களும்
உள்ளனர் என்றே உணர்ந்து கொள்வாய்!

குள்ள மனத்தவன் இல்லை, நீ! மற்று, ஒரு
கொடுமை நெஞ்சின னும், நீ இல்லை!
கடுமையாய்ப் படித்துக் கருத்தொடு வளரும்
நல்ல உளத்தவன்; நல்லவை நினைப்பவன்!
வல்ல செயலினன்; வகுத்த கடமையன்!

படித்து வளர்ந்து பட்டம் பெற்றே
இடித்த புளியாய் இருந்த இடத்திலே
அமர்ந்து, தின் னாமல் அலைந்து திரிந்து
நிமிர்ந்து குனிந்து, நேர்மை குலையாது,

நாட்டுத் தலைவனோ, நல்அதி காரியோ,
கேட்டை அகற்றும் அறிஞனோ, வணிகனோ
எந்த நிலைக்கு நீ வளர்ந் தாலும்
அந்த நிலையால் அனைவர்க்கும் உதவும்
தொண்டு நினைவைத் தொலையா நினைவாய்க்
கொண்டு வாழ்வைக் கொள்கை வாழ்வாய்
நடத்திப் புகழ்பெறு! நல்லவர் பெற்ற
இடத்தில் நீயும் ஓர் இடம்பெற்று உய்கவே!

— பாவலரேறு பெருஞ்சித்திரனார்— -1981

தமிழ்ச்சிட்டு

*சிறுவர் கலை இதழ்*

**குரல்–25 இசை–1**

"இன்றைய பயனோ
நேற்றைய உழைப்பு!
இன்றைய சிறுவர்
நாளைய உலகம்!
நன்று செய்வதே
நமக்குநல் வாழ்க்கை
என்றும் அழியாது
இருப்பது புகழே!

– பாவலரேறு

நிறுவனர்:
**பாவலரேறு பெருஞ்சித்திரனார்**

ஆசிரியர்:
**தாமரை பெருஞ்சித்திரனார்**

அனைத்துத் தொடர்புகளுக்கும்
**'தமிழ்ச்சிட்டு'**
செந்தமிழ் அடுக்ககம்,
மேடவாக்கம் கூட்டுச்சாலை,
சென்னை– 601 302.
தொலைபேசி எண் : 227 0231

# செயல்

உலகில் மிகவும் கடினமானது செயல் என்பதுதான்.

விலங்குகள் போல் அல்லாமல் மாந்தன் வேறுபடுவதும் செயல்களால்தாம்.

வெளி நிலையிலிருந்து பொதுவாகப் பார்த்தால் செயல் என்பது மிகவும் எளிது போன்றே தோன்றும்.

ஆனால் செயல் மிகவும் கடினமானது.

எதைச் செய்ய வேண்டுமோ அதைப்பற்றிப் பேசுவது எளிது. ஆனால் பேசிய படியே செய்வது கடினமானதாகிவிடும்.

ஒன்றை எப்படிச் செய்யலாம் என எண்ணுகிறபோது முழு விடுதலையுடன் நாம் எண்ணுகிறோம். ஆனால் அதைச் செய்கிற போது பல்வேறு தடைகள் ஏற்படும்.

முதலில் ஒரு செயலைக் காலத்தால் செய்ய வேண்டும். செய்யப்பெற வேண்டிய காலம் என்பது தொடங்குகிற காலம் முடிக்கிற காலம் குறித்த தெளிவு வேண்டும்.

நல்ல மழைக் காலத்தில் சில செயல்களைச் செய்ய இயலாது போலவே, காற்று கடுமையாக அடிக்கும் பொழுதும் நாம் சில பணிகளைச் செய்ய இயலாது.

எனவே ஒரு செயல் செய்யப் பெற வேண்டிய காலம் மிகவும் முகாமையானது பிறகு செயலின் வலிமை கருதப்படவேண்டும் ஒருவேலையை எத்தனைப்பேர் செய்ய இயலும் எப்படிச் செய்ய இயலும் என்பதாகக் கருதுவது அது.

அதற்குப் பின்னர் அந்த வேலையைத் திறம்படச் செய்வது குறித்து எண்ணப்பட வேண்டும்.

இப்படிப் பலப்பட எண்ணி முடிக்கப் பெற்ற பின்னரே ஒரு செயலைச் செய்ய

வேண்டும். அப்படிச் செய்கிறபோது ஏற்படுகிறத் தடைகளை எப்படி நாம் எதிர் கொள்ளப் போகிறோம் என்பது இன்னமும் சிக்கலானது.

மிதிவண்டி ஓட்டத்தெரியாத தம்பி ஒருவர், மிதிவண்டியை ஓட்டிப் பழகுவது போன்றது செயல்.

மிதிவண்டிய ஓட்டி விடலாம் என்று எண்ணப் பெறுவதாலேயே அதை ஓட்டி விட முடியாது. முதலில் மிதிவண்டியைத் தள்ளிப்பழக வேண்டும். பிறகு தத்தி தத்தித் செல்லப் பழகவேண்டும்.

அதன்பின் மிதிவண்டி இரு மிதிப்பான்கள் மீதும் இரு கால்களையும் வைத்துப் பழகுதல், பிறகு கொஞ்சம் கொஞ்சமாக மிதிக்கப் பழகுதல், பின்னர் நிறுத்தப் பழகுதல் – இறங்கப் பழகுதல் பிறகு ஓட்டப் பழகுதல் – இப்படிச் படிப்படியாகத் தான் அறிந்து முடிக்கிற பொழுதே மிதிவண்டி ஓட்ட முடியும்.

அவ்வாறு ஓட்டுகிறபோது – எதிர்வரும் வண்டிகளுக்கு வழிவிட்டு ஓரமாகச் செல்லப் பழக வேண்டும்.

இவ்வாறு ஒரு செயல், பலபடி நிலைகளைக் கடந்து நிறைவு பெறும் பொழுதுதான் முடிவுறும்.

அந்த இடைச் சூழலில் சலிப்பு ஏற்படக்கூடாது. ஆர்வம் குறையாமல் இருக்க வேண்டும்.

அத்தகைய ஆர்வம்தான் நமக்குச் செயலைத் தொடர்ந்து செய்யப் பழக்குவது.

எனவேதான் நம் திருவள்ளுவப் பேராசான் செயல்குறித்தும் – அதன் நுட்பங்கள் குறித்தும் நிறைய எழுதிச் சென்றுள்ளார்கள்.

நம் அருந்தமிழ் ஐயா பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்கள் 'செயலும் செயல் திறனும்' என்று ஒரு நூலே விரிவாக எழுதியுள்ளார்கள்.

அவ்வகையில் திறம்படச் செய்யப்பெறுகிற செயல் யாருக்கான செயல் என்பதும் அடிப்படையானது.

நம் செயல்கள் தன்னலத்திற்கானதா? பிறர் யாரோ ஒருவருடைய நலனுக்கானதா என்றும் கண்டறியப்பட வேண்டும்.

நம் செயல்கள் மக்கள் நலம் நோக்கியதாக – பொதுநலம் நோக்கியதாக இருக்க வேண்டுமே அல்லாமல் தன்னலம் சார்ந்ததாக இருந்திடக் கூடாது.

தன்னலமான பணிகளைச் சிறந்த செயல் என ஏற்க முடியாது.

பொதுநல உணர்வுடைய செயல்களால்தாம் ஒரு குமுகம் பயனுறமுடியும்.

தன்னல நோக்குடைய செயல்களால் குமுகத்திற்கே இன்னல்கள் தாம் வரும்.

எனவே, பொதுநலம் சார்ந்த செயல்களைத் திறம்பட செய்யப் பழகுதல் வேண்டும்.

●

# சியார்சு பெர்னார்டு சா



ஆங்கில இலக்கியத் துறையில் உலகப் புகழ்பெற்ற எழுத்தாளராக விளங்கியவர் சியார்சு பெர்னார்டு சா இவர் சிறந்த நாடகாசிரியர்; புதின ஆசிரியர்; திறனாய்வாளர்.

அயர்லாந்தின் தலைநகராகிய 'டப்ளின்' நகரத்தில் பெர்னார்டு சா பிறந்தார். பள்ளிக்கல்வி இவரைக் கவரவில்லை. ஆனால், வீட்டில் தாமாக நூல்களைப் படித்து இலக்கிய அறிவை வளர்த்துக் கொண்டார். 15 ஆம் அகவையில் ஓர் அலுவலகத்தில் வேலைக்குச் சேர்ந்தார். இவருடைய தாய் இசையாசிரியராகப் பணியாற்றி வந்தார். இவருக்கும் இயல்பாகவே இசையில் ஆர்வம் இருந்ததால் தாயிடமிருந்து இக்கலை பற்றிய நுட்பங்களை அறிந்துகொண்டார். ஓர் எழுத்தாளராக வேண்டும் என்ற முடிவோடு 1876-இல் சா இலண்டனுக்குச் சென்றார். இசை நாடகம் பற்றிய திறனாய்வுகளைப் பல இதழ்களில் எழுதிவந்தார். விரைவில் இலண்டனிலுள்ள சிறந்த இசை, நாடக, இலக்கியத் திறனாய்வாளர்களில் ஒருவராகப் புகழ் பெற்றார். 1879 முதல் 1883 வரை நான்கு புதினங்களை எழுதினார். இவற்றில் இவருடைய உயர்ந்த சிந்தனைகள் இடம் பெற்றிருந்தன. எனினும் இந்த புதினங்கள் போதிய வெற்றி பெறவில்லை.

இதற்கிடையில், காரல் மார்க்சின் பொதுவுடைமைக் கொள்கை இவரைக்

கவர்ந்தது. வன்முறையைத் தவிர்த்து, அமைதி வழியில் பொதுவுடைமைக் கொள்கை களைப் பரப்புவதற்காக நிறுவப்பட்டிருந்த பேபியன் கழகத்தில் 1884 இல் சேர்ந்தார். விரைவில் அதன் முதன்மைத் தலைவர்களுள் ஒருவரானார்.

ஆங்கில மொழியில் சிறந்த நாடகங்கள் இல்லை எனக் கருதி இவர் தாமே நாடகங்கள் எழுதலானார். இவர் 50க்கும் மேற்பட்ட நாடகங்கள் எழுதியுள்ளார். அவை, இலக்கிய உலகில் இவருக்குச் சிறந்த ஓர் இடத்தைத் தேடித்தந்தன. இவர் தம் நாடகங்களில் குமுகத்தில் காணப்படும் தீமைகளையும், மக்கள் வாழ் வில் உண்மையாக ஏற்படும் சிக்கல்களையும் பற்றி எழுதி னார். இது ஆங்கில நாடக உலகில் ஒரு புரட்சியாகத் தோன்றியது. 'கருத்துகள் அடங்கிய நாடகம்' என்ற நாடக இனத்தை இவர் துவக்கி வைத்தார். கருத்து கள் நிறைந்திருப்பினும் நாடகம் சுவையாக இருக்க முடியும் என்பதை இவர் மெய்ப்பித்தார்.

சா எழுதிய நாடகங் களுள் வாரன் அம்மையார், தொழில் போர்க்கருவிகளும் மனிதனும், பிக்மேலியன் ஆப்பிள் வண்டி, தூய சோன் முதலியவை முதன்மை யானவை. இவர் எழுதிய நாடகங்களுள் சிறந்தது தூய சோன் என்பர்.

இவர், தம் நாடகங்கள் ஒவ்வொன்றுக்கும் நீண்ட முகவுரை எழுதினார். இம் முகவுரைகள் ஆங்கில மொழியில் சிறந்த உரைநடை இலக்கியமாக மதிக்கப் பெறு கின்றன. எள்ளித் திருத்தும் போக்கில் நகைச்சுவை ததும்ப எழுதுவது இவரு டைய நடையின் தனிச் சிறப் பாகும். எப்பொருள் பற்றி இவர் எழுதினாலும் அதை மக்கள் விரும்பியதற்கு இவரு டைய இந்த நடையே காரணம்.

இலக்கியத்திற்கு இவர் செய்த தொண்டிற்காக இவருக்கு 1925 இல் நோபெல் பரிசு வழங்கப் பட்டது. இவர் 94 ஆண்டு கள் வாழ்ந்தார். இறுதிவரை எழுதிக்கொண்டே இருந்தார்.

## பாவாணர் — பாவலரேறு
## பணிமுடிப்போம் வாரீர்!

★ தமிழ் – தமிழர் வரலாறு
தமிழருக்குத் தமிழ் நிலத்தில்
தந்திட்ட தன்மான
மதிஞர் – தனித்
தமிழினிலே சிறந்திட்ட
அறிஞர்!

★ தமிழனுக்கு மொழிமானம்
வேண்டுமென்று தளராது
தமிழ் நிலத்தில் உழைத்திட்ட
தொண்ட – அவரே
தனித்தமிழாய் வாழ்ந்திட்ட
தலைவர்!

★ மொழிகளுக்கு வித்தான
மூலமொழி தமிழென்று
மொழியாய்வில் தெளிந்துணர்ந்து
அறைந்தார் – தமிழ்
மொழிவாழ தாம் வாழ்ந்து
சிறந்தார்!

★ கசடான பலமொழிகள்
கலந்ததினால் தமிழினிலே
களைபறிக்க தம்வாழ்வைத்
தந்தார் – தமிழ்
கற்பதற்கு தமிழருக்கு
ஈந்தார்!

★ உலகத்தில் முதல்குளிர்ந்த
தமிழ்நிலத்தில் உயிரான
முதல் மாந்தன் தமிழனென்று
வென்றார் – தமிழ்
முதல்மொழி என்றாய்ந்து
நின்றார்!

★ பாவாணர் பாவலரேறு
தொண்டொன்றே தமிழினத்தை
தமிழ்நிலத்தில் உய்விக்கும்
தமிழா – அந்த
பணியேற்று வாழ்ந்திடுவோம்
தமிழா!

— புதுவை. தமிழ்நெஞ்சன்

# மலைப்பாம்பின் பசி



வலைப்பின்னல் கோடுகளிட்ட மலைப்பாம்பு உலகின் மிகப் பெரிய பாம்புகளில் ஒன்று. சிறந்த மலைப்பாம்பு எட்டு மாத்திரி நீளமும், 265 குண்டு எடையும் இருக்கக் கூடியது.

இம்மாதிரி அரக்கப் பாம்புகளின் வலிமை மிகப் பெரிது. இரையைத் தங்கள் வலிய உடலால் சுற்றி இறுக்கி எஃகுக் குறட்டால் நெருக்குவது போல அதை இவை நொறுக்கிவிடும்.

இந்தக் கொடிய நெரிப்பு விலங்கின் மூச்சைப் பிடித்து விடும். இரை விலங்கின் உயிர் போன பின்புதான் பிடி நெகிழும். அப்புறம் மலைப்பாம்பு சுற்றைப் பிரித்து இரை உயிரின் தலையிலிருந்து தொடங்கி அதை உள்ளே இழுத்து விழுங்கும். இரை விலங்கு பெரியதானால் பாம்புக்கு மறுபடி பசி எடுக்க ஒரு மாதமோ, அதற்கு மேலுமோ செல்லும்.

மலைப்பாம்பு இரையின் எலும்புகளை எளிதாக நொறுக்கிவிட முடியும், ஆனாலும் அது நொறுக்குவதே இல்லை. நெடுங்காலம் நிகழ்ந்த தகவமைப்பின் போது இரையெடுப்பதின் மிகச் சிறந்த வடிவங்கள் நிலை பெற்று விட்டதன் விளைவே மலைப்பாம்பின் இந்தச் சிறப்புத் தன்மைக்குக் காரணம். முறிந்த எலும்புகள் மலைப்பாம்பின் உட்புறத்தைக் கிழித்து இரையெடுப்பதற்குத் தடை செய்யுமே.

ஒரு தடவை மலைப்பாம்பு ஒன்று அதற்கு அண்மையில் இருந்த முதலைகளின் இருப்பிடத்துக்கு ஊர்ந்து சென்றது.

அவை எல்லாம் முழு வளர்ச்சி அடைந்த பெரு முதலைகள். மலைப் பாம்பு அவற்றில் ஒன்றை இறுக்கிக் கொன்று விழுங்கி விட்ட போது. மருத்துவர்கள் பாம்புக்கு அறுவைப் பண்டுவம் நடத்த வேண்டும் என்று வற்புறுத்தினார்கள் ஆனால் மலைப்பாம்போ சில நாள்களிலேயே இரையைச் செரித்து விட்டது. செரிக்க முடியாத கொம்புப் பொருளாலான செதில்களும் உகிர்களும் மட்டுமே கழிவாக வெளியேற்றப்பட்டன. ஆயினும் வழக்கமாக எங்கள் மலைப்பாம்பு பன்றிகளையே தின்றது. இவற்றை அது எளிதாகச் செரித்தது. கட்டை மயிர்கள், குளம்புகள், பற்கள் ஆகியவற்றை மட்டுமே அது செரிக்காமல் கழித்தது.

மலைப்பாம்பு நஞ்சு உள்ளது அன்று. நல்ல பாம்புகளும் விரியன்களும் போன்ற நச்சுப் பாம்புகள் காடிகள் அமைந்த நச்சுப் பற்களாலோ (நல்ல பாம்புகளில் போல) குழாய்வடிவான நச்சுப் பற்களாலோ நஞ்சினை இரைகளின் உடலில் செலுத்தி அதன் மூலம் அவற்றைக் கொல்கின்றன. சில வேளைகளில் நச்சுப் பாம்பின் இரை தப்பி ஓடிவிடுவதுண்டு. ஆயினும் நஞ்சினால் அது மரித்துவிடும். இரை எங்கே தான் ஓடினாலும் பாம்பு அதைத் தவறாமல் கண்டுபிடித்துவிடும்.

தீண்டப்பட்ட உயிரியின் தடத்தைப் பின்பற்றி, வழியிலுள்ள தரையையும் பயிர்களையும் இரு பிளவான நாவினால் உணர்ந்தவாறு பாம்பு ஊர்ந்து செல்லும். இந்தக் கவை நாக்கு மிக்க நுண்ணுணர்வு உள்ள உறுப்பு. பாம்புகளுக்கு மோப்ப உணர்வு இல்லாத குறையை இது நிறைவு செய்கிறது.

பாம்புகள் தங்கள் இரைகளை நிலைக்குத்திட்டு நோக்குவதன் மூலம் வசியம் செய்வதாகப் பொத்தகங்களில் மிக அடிக்கடி காண்கிறோம். இது முற்றிலும் தவறு. மலைப்பாம்பு வகைகள் தங்கள் செதில்கள் உள்ள தோலின் அசைவற்ற பளபளப்பினாலேயே குளம்புள்ள விலங்குகள், கொறிக்கும் விலங்குகள் முதலியவற்றைத் தம்பால் ஈர்க்கின்றன. இரையைக் கண்டுகொண்டதும் மலைப்பாம்பு வளைந்து கொண்டு அது அருகே வருவதற்காகப் பொறுமையுடன் காத்திருக்கும்.

ஆவலால் உந்தப்பட்ட விலங்கு, வியப்பானத் தோற்றம் உள்ள இந்தப் பொருளின் அருகே வரும். அது போதுமான அருகில் நெருங்கியதும் மலைப்பாம்பு அதைக் கவ்விப் பிடித்துத் தசை வலிமையுள்ள உடலால் சுற்றி இடுக்கி அக்கணமே செயலறச் செய்து விடும்.

பாம்பு இரையைத் தெரிந்தெடுத்த பின் அந்த விலங்கு தப்புவது அரிதே. எனினும் பாம்பு பசிக்கும்போது மட்டுமே தாக்கும். இந்த அரக்கப் பகைவனுடனான போராட்டத்தில் மற்ற விலங்குகள் ஒன்றுமே கற்கவில்லை என்பதையே இது காட்டுகிறது.

# புதிர் விடைகள்

1. அடிப்படைச் சம்பளம் ௹. 115. இது எப்படியென்று கேட்கிறீர்களா? கூடுதல் நேர வேலை ஊதியத்துடன் 100 ௹பாயைக் கூட்டினால், அடிப்படை சம்பளத்தைக் கணித்து விடலாம் என்பதை நாம் அறிவோம். இவ்விதம் 100 ௹பாயை 130 ௹பாயுடன் கூட்டினால் இரண்டு அடிப்படைச் சம்பளங்கள் (130 + 100 = 230) கிடைக்கும். எனவே, கூடுதல் வேலை நேரம் இல்லாமல் ஒரு அடிப்படைச் சம்பளம் ௹. 115 ஆகும்.

2. இது மிகவும் எளியது. 847 எனும் மூன்று இலக்க எண்ணை உங்கள் நண்பர் எழுதியுள்ளார் என்று வைத்துக் கொள்ளுங்கள். இந்த இலக்கங்களை (8+4+7) கூட்டினால் மொத்தம் 19 வரும். இதை முதலில் உங்கள் நண்பர் எழுதிய எண்ணிலிருந்து கழிக்கச் சொல்லுங்கள் : 847–19 = 828.

நீங்கள் இப்போது கண்டுபிடிக்க வேண்டியது அடிக்கப்பட்ட இலக்கம் எது என்பதேயாகும். அடிக்கப்பட்ட இலக்கம் போக நண்பர் கூறும் மீதியுள்ள இலக்கங்களைக் கூட்டிக் கொள்ளுங்கள். அந்த எண்ணுக்கு அடுத்துவரும் 9 ஆல் வகுபடக்கூடிய எண்ணிலிருந்து அதைக் கழியுங்கள். அப்போது வரும் விடையே அடிக்கப்பட்ட இலக்கமாகும். எடுத்துக்காட்டாக, 828 எனும் எண்ணில் உங்கள் நண்பர் முதல் இலக்கத்தை (8) அடித்து விட்டு மற்ற இரண்டு இலக்கங்களைக் (2 மற்றும் 8) கூறினால் அவற்றைக் கூட்டுங்கள். அப்போது மொத்தம் 10 வரும். 9 ஆல் வகுப்படக்கூடிய அடுத்துவரும் எண் 18 ஆகும். அதிலிருந்து 10ஐக் கழித்து விட்டால் 8 வரும். இதுவே உங்கள் நண்பர் அடித்துவிட்ட இலக்கமாகும்.

# தொல்காப்பியம்

– பாவரிமா இளஞ்சித்திரன் –

மொழிக்கோர் இலக்கணம்; தொன்மையது!
முதல்நூல் சார்ந்த; பின்னதிது!
விழிக்கோர் இமைபோல் மொழிக்கிதுவாம்!
விளம்பின் அதுதொல் காப்பியமாம்!

அகர ஒலிமுதல் தமிழன்றோ!
அதுவே உலகில் முதலன்றோ!
பகர நமக்கிது பெருமையடா!
பார்தொல் காப்பியம் அருமையடா!


ஐந்து வகையாய் இலக்கணங்கள்;
அழகாய் ஆய்ந்து படைத்ததுவாம்!
எந்த மொழியிலும் இவ்வண்ணம்
இலக்கணம் இல்லை; இல்லையடா!

எழுத்து, சொல்,பொருள் யாப்பணியாம்;
இவைநம் தமிழில் இலக்கணமாம்!
விழிப்பொருள் வாழ்க்கையை அகம்புறமாய்
விரித்ததாம்; தமிழ்தொல் காப்பியமாம்!

மொழிநூல் இஃதாம்; தமிழர்நம்
முன்னோர் கண்டசொல் முதல்நூலாம்!
அழியாப் புகழ்தொல் காப்பியனார்
அறிவினில் விளைந்த திந்நூலாம்!

# இரவீந்திரநாத தாகூர்

சன கண மன' என்று தொடங்கும் இந்தியாவின் தேசியப் பாடல் நம் எல்லோருக்கும் தெரியும். இதை இயற்றியவர் இரவீந்திரநாத தாகூர். இவர் உலகப் புகழ் பெற்ற பாவலர் மெய்யறிவாளர்; நாடக ஆசிரியர்; புதின ஆசிரியர்; இசை வல்லுநர்; திறமையான ஓவியர்; சிறந்த நாட்டுப் பற்றாளர். நோபல் பரிசு பெற்ற முதல் இந்தியர்.



இரவீந்திரர் வங்காளத்தில் 'காளிக் கோட்டம்' என்னும் இன்றைய கொல்கத்தா நகரில் ஒரு பெருஞ் செல்வக் குடும்பத்தில் பதினான்காம் குழந்தையாகப் பிறந்தார். இவருடைய குடும்பமே ஒரு கலைக்குடும்பம். இவருடைய தந்தை தேவேந்திரநாத தாகூர். மிகச் சிறந்த அறிஞர். முனிவர் எனப் பாராட்டப் பெற்றவர்.

இரவீந்திரர் தம் தந்தையிடம் ஆங்கிலமும் சமற்கிருதமும் கற்றார். ஏழாம் அகவையிலேயே பாடல்கள் இயற்றலானார். 1878–இல் இங்கிலாந்து சென்று இலண்டன் பல்கலைக்கழகத்தில் கல்வி பயின்றார். ஆனால் படிப்பு முடியும் முன்னரே, 1880–இல் இந்தியா திரும்பினார். மீண்டும் 1881–இல் இங்கிலாந்து சென்றார். அப்பொழுதும் பட்டம் பெறாமலே தாயகம் திரும்பினார். அதன் பின் தம் 22–ஆம் அகவையில் மிருணாளினி தேவியை மணந்தார்.

இரவீந்திரர் ஐரோப்பா, அமெரிக்காக் கண்டங்களிலும், கிழக்கு நாடுகளிலும் சுற்றுச் செலவு செய்து சொற்பொழிவுகள் நிகழ்த்துவதும், இந்தியா திரும்பி எழுத்தில் ஈடுபடுவதுமாக வாழ்ந்தார். 1901–இல் கொல்கத்தா அருகில் இயற்கை சூழ்ந்த போல்பூர் என்ற இடத்தில் 'சாந்தி நிகேதனம்' என்ற பாழியை இவர் தந்தை கட்டினார். அங்கு இவர் பாழி ஒன்று நிறுவி, புதிய முறையில் கல்வி பயிற்றுவித்தார். இப்பள்ளி விரிவடைந்து, 'விசுவ பாரதி' என்னும் பெரிய பல்கலைக்கழகமாக வளர்ந்துள்ளது.

இரவீந்திரரின் முதல் பாடல்கள் தொகுதி 1878–இல் வெளியாகியது. பின்னர் இவர் வங்காளியிலும், ஆங்கிலத்திலும் பல அரசியல், மெய்யியல் நூல்களை எழுதினார். புதினங்கள், நாடகங்கள், சிறுகதைகள், கட்டுரைகள் முதலியவற்றையும் எழுதி வெளியிட்டார். கருத்துகளும், இலக்கிய நயமும் செறிந்த 'கீதாஞ்சலி' என்னும் பாடல் தொகுதிக்கான இரவீந்தருக்கு 1913–ல் இலக்கியத்திற்கான

???  ???  ???

## புதிர்கள்

*1. சென்ற கிழமை கூடுதல் நேர வேலைக்கும் சேர்த்து எனது ஊதியம் 130 ரூபாயாக இருந்தது. எனது அடிப்படை ஊதியம் கூடுதல் நேர வேலைக்கான ஊதியத்தைவிட 100 ரூபாய் அதிகம். அப்படியானால் எனது அடிப்படை ஊதியம் எவ்வளவு?*

*2. பல இலக்கங்கள் கொண்ட ஏதேனும் ஓர் எண்ணை எழுதிக் கொள்ளும்படி உங்கள் நண்பரிடம் கூறுங்கள். இந்த இலக்கங்கள் அனைத்தையும் கூட்டி அந்தத் தொகையை முதலில் எழுதிக் கொண்ட எண்ணிலிருந்து கழிக்கச் சொல்லுங்கள்.*

*பிறகு கழித்தத் தொகையிலுள்ள ஏதேனும் ஓர் இலக்கத்தை அடித்து விட்டு, மீதமுள்ள இலக்கங்களைத் தெரிவிக்கும்படி கூறுங்கள். அவர் அடித்து விட்ட இலக்கத்தை இப்போது உங்களால் கூற முடியும். இது எப்படி முடியும்?*

நோபெல் பரிசு வழங்கப்பட்டது. இப்பரிசுத் தொகை முழு வதையும் இவர் சாந்திநிகேதனத்தின் வளர்ச்சிக்காக வழங்கினார்.

இந்தியாவில் நாடக மறுமலர்ச்சிக்கு இரவீந்திரர் ஆற்றிய தொண்டு மிகப் பெரியது. இவருடைய நாடகங் கள் யாவும் ஆழ்ந்த மெய்யியல் கருத்துகள் நிரம்பியவை. இவர் தம் புதினங்களின் மூலம் வங்கக் குமுகத்தில் காணும் பல குறைகளைப் போக்க முயன்றார். இவர் ஏறத்தாழ 3,000 இசைப்பாடல்களை இயற்றியுள்ளார். இவ்விசைப் பாடல்களைத் தாமே இனிய குரலில் பாடுவார். இவர்தம் கட்டுரைத் தொகுதிகளும் குறிப்பிடத் தகுந்தவை. குழந்தைகளைப் பற்றியும் குழந்தைகளுக் காகவும் இவர் எழுதிய பாடல்கள் சிறப்பு வாய்ந்தவை.


இந்தியாவின் பண்பாடு, சமய மரபுகள் குறித்து இவர் பெருமதிப்புக் கொண்டிருந்தார். இவற்றைத் தம் எழுத்து களில் போற்றியுள்ளார். வெளிநாடு சென்றபோதெல்லாம் இந்தியாவின் பெருமைகளையும், பண்பாட்டுச் சிறப்பை யும் உலகறியச் செய்தார். இரவீந்தரர் தமது முதுமைக் காலத்தில் பல அரிய ஓவியங்களை வரைந்தார். இவருடைய ஓவியங்களின் கண்காட்சி 1932–இல் உலகில் பல இடங்களில் நடைபெற்றது.


இந்தியாவின் விடுதலைப் போராட்டத்திலும் இரவீந்திரர் பங்கு கொண்டார். காந்தியடிகள் தொடங்கிய பல இயக்கங்களுக்கு இவர் ஆதரவு தேடினார். நாட்டு விடுதலை இயக்கத்திலும், வங்காளப்பிரிவினை எதிர்ப்பு இயக்கத்திலும் தீவிரப் பங்குபெற்றார். தமது பேச்சினாலும் எழுத்தினாலும் நாட்டு மக்களிடம் விடுதலை உணர்வைத் தூண்டினார். 1919–இல் நடந்த பஞ்சாப் படுகொலையைக் கண்டித்து இவர் தமக்கு அரசு அளித்திருந்த ‘சர்’ பட்டத்தைத் துறந்தார்.

இவர் 1941–இல் காலமானார்.


# மிதவை

நெடுஞ்சாலையில் செல்லும் போது மேடுபள்ளங்களைப் பார்த்துச் செல்ல முடியும். ஆனால் கடல், ஆறு முதலியவற்றில் கப்பலிலோ, படகிலோ செல்லும்போது நீரினுள் மூழ்கியிருக்கும் பாறைகளையும், ஆழம் குறைந்த இடங்களையும் எப்படித் தெரிந்து கொள்வது? பாறைகளில் மோதினால் படகு உடைந்துவிடும். ஆழம் குறைந்த பகுதிகளில் சென்றால் கப்பலின் அடிப்பாகம் தரையில் தட்டி நகரமுடியாமல் நின்றுவிடும். சில சமயங்களில் இழப்பும் ஏற்படும். இந் நேர்ச்சிகளைத் தவிர்க்க ஏதமான இடங்களைக் காட்டுவதற்கு ஏதாவது கருவி இருக்க வேண்டும். இதற்குத்தான் மிதவை பயன்படுத்தப்படுகின்றது. துறைமுகங்களிலும் கப்பல்களுக்கு வழிகாட்டியாக மிதவைகள் பயன்படுகின்றன.






மிதவைகள் பொதுவாக கூம்பு வடிவிலும் உருளை வடிவிலும் இருக்கும். பாறைகள் இருக்குமிடம், ஆழம் குறைந்த இடம், மிக ஏதம் மிகுந்துள்ள இடம், செல்ல வேண்டிய திசை- இவை போன்று பலவற்றைக்



குறிக்க மிதவைகளில் வெவ்வேறு நிறத்தில் வண்ணம் தீட்டியிருப்பார்கள். குறுக்காகவோ நெடுக்காகவோ பட்டை தீட்டுவதும் உண்டு. எண்களையும் குறிப்பிட்டிருப்பார்கள்.



சில மிதவைகளில் விளக்குகள் இருக்கும். இரவு நேரத்தில் இவை பயன் படுகின்றன. மிதவை யினுள்ளேயே அழுத்த நிலையில் வைக்கப் பட்டிருக்கும். வளிமம் இந்த விளக்குக்கு எரிபொருளாகப் பயன்படுகிறது. மின்கலத்தின் மூலம் எரியும் மின்சார விளக்குகளும் சில மிதவைகளில் உண்டு. விளக்கு ஒளியின் நிறமும் அதன் அளவும் இடத்திற்கு ஏற்றவகையில் மாறுபடும். இவ்வாறு மிதவைகளின் மூலம் அவை குறிக்கும் செய்தியை மீகாமனுக்கு எச்சரிக்கைச் செய்கிறார்கள். இத்தகைய மிதவைகளை ஒருவகைக் கலங்கரை விளக்கம் என்றே சொல்லலாம்.

மணியோசை தொடர்ந்து கேட்கும் மிதவைகளும், ஊதல் ஒலி உண்டாகும் மிதவைகளும் உண்டு. ஒலி உண்டாக்கும் மிதவைகளால் ஒரு நன்மை உண்டு. பனி மூடியுள்ள பகுதிகளில் விளக்கு ஒளி தெரியாதன்றோ? அத்தகைய இடங்களில் மணியோசையாலோ, ஊதல் ஒலியாலோ மிதவைகள் எச்சரிக்கை செய்கின்றன.

---

## உங்களுக்குத் தெரியுமா ?

உலகில் முதல் முறையாக ஒரு நாட்டின் தலைமை அமைச்சராகப் பணியாற்றிய பெண்மணி — திருவாட்டி பண்டார நாயகா. (இலங்கை)

எவரெசுட்டு உச்சியை முதலில் அடைந்த பெண்மணி — சூன்கோதபேய் (நிப்பான்).

இந்தியாவின் முதல் பெண் வழக்கறிஞர் — இரெசினா குத்தா.


ஆளுநர் பதவியில் அமர்ந்த முதல் பெண்மணி — சரோசினி.

# பறவைக் கூடு



கப்பல் புறப்பட்டது. கப்பலின் பின்புறம் பல்வகைத் தளவாடங்களின் நடுவே கப்பல் செல்ல வந்த நான் நின்றேன். சுற்றிலும் கயிறுகளும் நங்கூரச் சங்கிலிகளும் கப்பலோட்டிகளுக்கு மட்டுமே தெரிந்த மற்ற பொருள்களுமாக இருந்தன. அற்றை எல்லாம் நான் கூர்ந்து கவனித்தேன். ஏனெனில் எங்கோ ஒரு இணைப் பறவைகள் கூடு கட்டியிருக்கின்றன என்று நான் அறிந்திருந்தேன்.

படிப்படியாக என் தேட்டத்தைத் தொடர்ந்தேன். முடிவில் கூட்டைக் கண்டுபிடித்து விட்டேன். அழகிய சிறு பறவை இணை ஒன்று, கப்பல் மேல் தட்டில் இருந்த பருமனான கயிற்றுச் சுருளுக்குள் கூடு கட்டியிருந்தது.



இறகுகள் முளைக்காத ஐந்து குஞ்சுகள் இரைக்காக ஈனக் குரலில் கீச்சிட்டன. அவற்றின் பெற்றோர், கப்பலில் பரபரப்பாக வளையவந்து கொண்டிருந்த மக்களைப் பொருட்படுத்தாமல் அவற்றுக்கு இரை கொண்டு ஊட்டிய வண்ணமாய் இருந்தன.

இது நிகழ்ந்த கடலில் கருவாடு ஏற்றிச் சென்று கொண்டிருந்த ஒரு நீராவிக் கப்பலில், செப்பனிடுவதற்காகக் கப்பல் இரண்டு கிழமைகளுக்கும் மேலாகத் துறைமுகத்தில் நிறத்தப்பட்டிருந்தது. அந்தப் பொழுதில்தான் பறவைகள் மேலே வருவதை அறியாமல், அதன் மேல் தட்டில் கூடு கட்டிவிட்டன.

கப்பல் புறப்பட்டதும் அத்துடன் செல்லும் கூட்டைப் பின் தொடர்வதைத் தவிர, பெற்றோர்ப் பறவைகள் செய்வதற்கு ஒன்றும் இல்லை. கப்பல், அவற்றின் தாய் நிலத்தை விட்டு மேன் மேலும் தொலைவில் சென்றது.

பசித்த குஞ்சுகளுக்கு இரை கொடுப்பதற்காகப் பறவைகள் ஈக்களையும் கப்பலில் காணப்பட்ட மற்றப் பூச்சிகளையும் பிடித்து வந்தன. காற்று பூச்சிகளை அப்பால் அடித்துச் சென்றபோது இந்தப் பறவைகள் அவற்றைப் பின்தொடர்ந்து வெகு தூரம் கடலுக்கு மேலே பறந்து பிடித்து மறுபடி கப்பலுக்குத் திரும்பின.

கப்பலில் இருந்தவர்கள் பறவைகளை இடையூறு செய்ய வில்லை.

கப்பல் மீண்டும் கரையை நெருங்கியதும் பறவைகள் அதை நோக்கிப் பறந்து போய் நிறைய பூச்சிகளை அலகில் கவ்விக் கொண்டு திரும்பின.

கூடுகள் சிறிது தொலைவு நகர்த்தப்பட்டால்கூடப் பறவைகள் அவற்றைக் கண்டுகொள்வது ஐயம் என்ற கருத்தை இவற்றின் நடத்தை மறுதலித்ததுபோலத் தோன்றியது. ஆனால் இந்தச் சூழலில் கப்பல் ஒரு தீவுக்கு இணையாக, இயங்கும் நிலப்பரப்பாக இருந்தது.

# வீரத் தமிழன்!

வீரனென்று சொல்லிடு
வீரத்தையும் காட்டிடு
தீரனாக இருந்திடு
தீண்டாமை ஒழித்திடு!

நெஞ்சம் நிமிர்ந்து நின்றிடு
நேசக்கை வளர்த்திடு
அஞ்சாமல் நீ சென்றிடு
அச்சத்தைத் துரத்திடு!

தமிழைக் காக்கத் துணிந்திடு
தன்னலத்தை நீக்கிடு
செந்தமிழைப் போற்றிடு
சீர்உயர்த்திப் பார்த்திடு!

பொங்கும் கடலாய் எழுந்திடு
பொழியும் மழையாய் இருந்திடு!
எங்கும் புதுமை படைத்திடு
என்றும் ஆண்மை காத்திடு!

– வ. களத்தூர் பாவலர் மு. முகைய்தீன்,


# தென்மொழி

## தூயதமிழ் இலக்கியத் திங்களிதழ்

### புதிய கட்டண விளக்கம்

| | உள்நாடு | வெளிநாடு |
|---|---|---|
| ஆண்டுக் கட்டணம் (மலருட்பட) | உரு. 100.00 | 350.00 |
| தனி இதழ் | உரு. 8.00 | 30.00 |
| வாழ்நாட் கட்டணம் | உரு. 1000.00 | 3500.00 |

# தமிழ்ச்சிட்டு (சிறுவர் கலை இதழ்)

| | உள்நாடு | வெளிநாடு |
|---|---|---|
| ஆண்டுக் கட்டணம் | உரு. 36.00 | 250.00 |
| தனி இதழ் | உரு. 3.00 | 20.00 |
| வாழ்நாட் கட்டணம் | உரு. 350.00 | 2500.00 |

த.நா. தலைமை அஞ்சலகத் தலைவர் 645/2001 தமிழ்ச்சிட்டு
டிஎன்/சிபி. பிஎம்சி. 645/2001

வெளிவந்துவிட்டது!

# தென்மொழி நாள்காட்டி




தனிநாள்காட்டி விலை உரு. 30.00
தமிழ்க்களத் தொடக்க விழாவில் சிறப்பு விலை உரு. 25.00
பத்துக்கு மேல் வாங்குபவர்களுக்குக் கழிவு உண்டு.

தொடர்புக்கு,
தென்மொழி
செந்தமிழ் அடுக்ககம்
மேடவாக்கம் கூட்டுச் சாலை
சென்னை - 601 302